# Tamil

## Memorandum of Understanding


| S .No | Description | Page No |
|---|---|---|
| 1 | Vellalar College for Women Thindal, Erode, Tamil Nadu. | 2-3 |
| 2 | k.a.s. ragunayagan arakattalai Chennai | 4-7 |

भारतीय गैर न्यायिक

बीस रुपये

रु.20

Rs.20

TWENTY RUPEES

INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU

9334
14.12.2022

08AC 790131

வெள்ளாளர் மகளிர் கல்லூரி
ஈ.ரோடு

மு.தா.வி. உரிமம் எண்: 58/TP1/200
நெ. 5, சுப்பையா தெரு.
திருப்பத்தூர், (வே மா.) தமிழ்நாடு

**MEMORANDUM OF UNDERSTANDING (MoU)**
**BETWEEN**
**SACRED HEART COLLEGE, TIRUPATTUR, VELLORE**
**AND**
**VELLALAR COLLEGE FOR WOMEN (AUTONOMOUS), ERODE.**

This MOU is entered into the 26th December, 2022 by and between **Sacred Heart College (SHC)** situated at Tirupattur, Vellore and **Vellalar College for Women (VCW)** at Erode.

The aforesaid institutions are hereinafter referred to individually as institute and collectively as institutes.

resources in connection with the objectives herein specified unless explicitly stated otherwise in the corresponding specific agreement.

**ARTICLE 3.** This agreement will be effective for a period of five years from the date of its signing and the renovation will be requested for the next period unless otherwise specified by the signing institutions.

**ARTICLE 4.** This agreement does not imply any financial duty upon both the institutions.

**ARTICLE 5.** Either party may terminate this agreement on written notification. Such notification must be given at least six months prior to the proposed date of termination. If the present agreement is terminated, both the parties must guarantee to facilitate the completion of the projects and initiatives already in progress.

**ARTICLE 6.** Each institution appoints a coordinator for the implementation of this agreement, who will be responsible for defining and organizing the programmes to be undertaken and for interaction between the two institutions.

**ARTICLE 7.** The intellectual property rights (IPR) that arise as a result of joint research and collaborative activity under the agreement will be worked out on a case basis and will be consistent with officially laid down IPR polices of the two institutes.

This MoU is executed in duplicate with each copy being an official version and having equal legal validity. By signing below, the institutes, acting by their duly authorized officers, have caused this Memorandum of Understanding to be executed, comes into effect on the day it is signed.

Date:
Place:

26/12/22
Principal
Sacred Heart College
Tirupattur, Vellore

Principal
Sacred Heart College (Autonomous)
Tirupattur-635 601, Tirupattur Dist

Witnesses:
1.

2.

SACRED HEART COLLEGE
TIRUPATTUR
635 601
TIRUPATTUR DT.
(AUTONOMOUS)

Principal
Vellalar College for Women
Erode.

புரிந்துணர்வு ஒப்பந்தம் - Memorandum of Understanding (MOUs)

ஆகஸ்ட் 2022 இல் எழுதப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியால் உருவாக்கப்பட்டது.

**முதலாம் நபர்**

1. திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை, திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம் – 635 601.

**இரண்டாம் நபர்**

2. 'கா.அ.ச. ரகுநாயகன் அறக்கட்டளை', எண் 29, 9வது அவென்யு, அசோக் நகர், சென்னை - 600083.

**1.1. திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி**

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியானது, அருள்திரு. ஜோசப் கரேஞோ என்ற சலேசிய மறைப்பணியாளரால் 1951இல் தொடங்கப்பெற்றது. எண்பத்தொரு மாணவர்களைக் கொண்டு தொடங்கப்பெற்ற இக்கல்லூரி, இன்று பத்துக்கும் மேற்பட்ட துறைகளையும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் நாலாயிரத்திற்கும் அதிகமான மாணவ, மாணவியரையும் உள்ளடக்கிய மாபெரும் நிறுவனமாக விளங்குகிறது.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஏனைய சலேசிய நிறுவனங்களைப் போலவே இத்தூய நெஞ்சகமும், இளைஞர்களை அனைத்து வகையிலும் தலைவர்களாக உயர்த்துவதைத் தனது தலைமை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக வடதமிழகத்தின் வறட்சிமிகு பகுதிகளான வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களின் ஏழை, எளிய இளைஞர் மற்றும் இளம் பெண்களைப் பட்டதாரிகளாக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பெரிதும் பாடுபட்டு வருகின்றது.

தமிழகக் கிராமப்புற மக்களுக்கு, குறிப்பாகப் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள குடும்பங்களிலிருந்து வரும் இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கு இச்சலேசிய நிறுவனம் புரிந்து வரும் தன்னிகரற்ற சேவைக்கும் வழங்கி வரும் தரமான கல்விக்கும் பாராட்டளிக்கும் வகையில் சென்னைப் பல்கலைக்கழகம் இக்கல்லூரிக்கு 1987ஆம் ஆண்டு தன்னாட்சி தகுதி வழங்கியது.

கல்லூரிக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டதன் விளைவாக, தமிழ்ப் பாடத்திட்டத்தில் ஓரளவு மாற்றம் கொண்டுவர முடிந்தது குறித்துத் தமிழ்த்துறை உள்ளபடியே மகிழ்ச்சியடைகின்றது. இளைஞர்களின் தமிழ் வளர்ச்சிக்கு நேரடியாக உதவக்கூடிய தரமான நூல்களைத் துணைப்பாடங்களாகப் பரிந்துரைத்துப் பயன்படுத்துவது, இளைஞர்களின் சிந்திக்கும்

Rev. Dr. K.A. Maria Arokiaraj SDB
Additional Principal,
Sacred Heart College (Autonomous)
Tirupattur-635 601, Tirupattur-Dist.

ஆற்றலை மேம்படுத்தும் வகையில் உரைநடை நூல்களை எழுதி வழங்குவது, செய்யுட் பகுதிகளைத் தற்காலத் தேவைகளுக்கு ஏற்பத் தெரிவு செய்து, விழுமியங்கள் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்திக் கற்பிப்பது, மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் வகையில் கட்டுரைகள் எழுதுதல், இதழ் தயாரித்தல் கவிதை, சிறுகதை மற்றும் நாடகம் எழுதுதல் போன்ற படைப்பிலக்கியம் சார்ந்து பயிற்சி அளித்து ஊக்குவிப்பது எனப் பல்வேறு வகைகளில் அரும் பணியாற்றி வருகின்றது.

1951 இல் இருந்து பொதுத்தமிழ் மட்டுமே கற்பிக்கப்பட்டு வந்த நிலையில் 2004 இல் முதுகலைத் தமிழ் இலக்கியமும் 2009 இல் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் 2011 இல் முனைவர் பட்ட ஆய்வும் 2014 இல் இளங்கலைத் தமிழ் இலக்கியமும் தொடங்கப்பட்டு, இன்று ஆய்வுத்துறையாக வளர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

**2.1. 'கா.அ.ச. ரகுநாயகன் அறக்கட்டளை'**

திருப்பத்தூர் திரு.கா.அ.ச.ரகுநாயகன் அவர்கள் தமிழ்ப் பெருந்தகை டாக்டர் மு.வரதராசனார் அவர்களிடம் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்ற முதல் அணி மாணாக்கர் நால்வருள் ஒருவர். திரு. வி. க. வின் நம்பிக்கை மலர்ச்சி நாயகர். டாக்டர் மு.வ.வின் ஆளுமைக்கு ஒரு வாரிசு என அவர் பெருமிதம் கொண்டவர். டாக்டர் மு. வ.வின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'அகல் விளக்கு' நாவலுக்குத் தம் மாணவர் ரகுநாயகனிடம் அறிமுகம் பெற்று அழகு பார்த்த தாயனைய பேராசிரியர் மு.வ.வின் அன்பிற்குப் பாத்திரமான மாணவர் ரகுநாயகன்! கா.அ.ச.ரகுநாயகன் அவர்களின் எழுத்துப் பணிகளுள், தம் ஆசிரியர் பெருந்தகை மு.வ. அவர்களுடனான தம்முடைய மாணவ நிலை அனுபவங்களின் பிழிவாகவும் பதிவாகவும் உள்ள 'மு. வ. எங்கள் ஆசிரியர்' என்னும் நூலும் கம்பர் படைத்த காவிய மாந்தர்' என்னும் நூலும் மிகவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

திரு.ரகுநாயகன் அவர்கள் 1945 ஆம் ஆண்டில் பச்சையப்பனில் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன், தம் தந்தையார் தொழிலதிபர் கா. அ. சண்முகனாருடன் இணைந்து, குடியேற்றம் திருமகள் மில்ஸ் நூற்பாலையின் செயலாளராகவும் இயக்குநராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். குடும்பத்தின் துணி வணிகம் - சமுதாயப் பணி - தமிழ்ப் பணி - அரசியல் பணி - ஆன்மிகப் பணி - கல்விப் பணி எனவாகத் தொடர்ந்தார். குடியேற்றம் அரசு திருமகள் ஆலைக் கல்லூரியின் உருவாக்கத்தில் தம் தந்தையாருடன் இணைந்த நிலையில் திரு. ரகுநாயகத்தின் பங்களிப்பு சிறப்புக்குரியதாக அமைந்தது. குடியேற்றம் வேதாந்த வாசக சாலையுடன் இணைந்த திருமகள் கல்விச் செல்வத்தின் அறங்காவலராகத் திகழ்ந்த திரு. ரகுநாயகன் அவர்கள், அன்றைய வடார்க்காடு மாவட்டத்துப் பள்ளிகளின் மேம்பாட்டுக்கு அதன்வழி அறப்பணிகள் ஆற்றியவர். திருப்பத்தூரின் பெரும் புகழுக்குரிய ஸ்ரீ இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியின் தாளாளரான திரு. ரகுநாயகன் அவர்கள் வாழ்நாள் முழுவதும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அதன் சீரிய வளர்ச்சிக்காக ஒல்லும் வகையில் உழைத்த பெருந்தகையாளர்.

ஸ்ரீ இராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளியை, சமூக மேம்பாட்டுப் பணிகளின் மையமாக - தமிழ் வளர் பண்ணையாக - பண்பாட்டுக் கருவூலமாக உருவாக்கி நலம் சேர்த்தார். கவி தாகூரின் 'சாந்தி நிகேதனாக'த் தம் பள்ளி விளங்க வேண்டும் என்பது அவர் கனவு!

Rev. Dr. K.A. Maria Arokiaraj SDB
Additional Principal,
Sacred Heart College (Autonomous)
Tirupattur-635 601, Tirupattur-Dist.

"தமிழ்ச் சான்றோர் கா. அ. ச. ரகுநாயகன் அவர்கள் ஒரு பள்ளியின் நிர்வாகி என்பதோடு, ஆசிரியர்களையும் மாணவர்களையும் அவர் அரவணைத்துச் சென்ற பாங்கு புனிதமானது; கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய நல்ல தமிழர்" என அவரை முன்னேராகக் கொண்டு நடை பயின்ற தமிழ் நெஞ்சினர் பலர்.

திரு. ரகுநாயகன் அவர்கள் திருப்பத்தூர் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர், திருப்பத்தூர் கம்பன் கழகத்தின் நிறுவனப் பொருளாளர், திருப்பத்தூர் அரிமா சங்கத்தின் நிறுவன உறுப்பினர் மற்றும் தலைவர், திருப்பத்தூர் டவுன் கிளப்பின் தலைவர், கருணாலயா ரூரல் மெடிக்கல் மிஷனின் வழி ஏழை எளியோரின் நலன் காத்த மருத்துவச் செயற்பாட்டாளர், தாம் திருப்பணி செய்த திருப்பத்தூர் கோட்டை அருள்மிகு கஜேந்திர வரதராஜப் பெருமாள் கோயில் மற்றும் கோட்டை ஈசுவரன் கோயில் ஆகியவற்றின் அறங்காவலர் குழுத்தலைவர், ஒய். எம். சி. ஏ நிறுவனத்தின் தொடர்பாளர், மேகாலயா தமிழ் மன்றத்தின் ஆர்வலர் -, இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் காவலர் எனத் திருப்பத்தூர் பகுதியின் அரை நூற்றாண்டு காலப் பொதுவாழ்வில் ஆழமான சுவடு பதித்த சேவைச் செம்மல் ஆவார். அவரது தமழ்ப்பணி தடையற்று தொடரவேண்டும் என்ற நோக்கில் 15.05.1990 அவரது குடும்பதாரால் முதாலாமாண்டு நினைவு நாளில் கா. அ. ச. ரகுநாயகன் அறக்கட்டளைத் தொடங்கப்பட்டது.

3. புரிந்துணர்வு ஒப்பந்த நோக்கங்கள்
   - கல்லூரி மற்றும் 'கா.அ.ச.ரகுநாயகன் அறக்கட்டளை' இடையேயான முறையான தொடர்பை அமைத்துக் கொள்ளுதல்.
   - கல்லூரி மற்றும் 'கா.அ.ச.ரகுநாயகன் அறக்கட்டளை' முன்னெடுக்கும் தமிழாய்வுப் பணிகளில் புரிந்துணர்வுடன் இணைந்து செயல்படுதல்.

4. முன்மொழியப் பெறும் தீர்மானங்கள்
   I. தமிழ் அறிஞர் கா. அ. ச. ரகுநாயகன் பெயரில் ஆண்டுதோறும் டிசம்பர் திங்களில் தூய நெஞ்சக் கல்லூரி, தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை வாயிலாக கா.அ.ச.ரகுநாயகன் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றினை மாணவர்கள் பயன்பெறும் வகையில் நிகழ்த்துதல். அந்நிகழ்விற்கான செலவுத்தொகையாக ஆண்டுதோறும் ரூ.10,000 (பத்தாயிரம்) கா.அ.ச.ரகுநாயகன் அறக்கட்டளை வழியாகத் தூய நெஞ்சக் கல்லூரித் தமிழ் துறைக்கு வழங்கிட உறுதி செய்தல்.
   II. தூயநெஞ்சக் கல்லூரி தமிழ்த்துறையும் கா.அ.ச.ரகுநாயகன் அறக்கட்டளையும் இணைந்து தமிழறிஞர் கா.அ.ச.ரகுநாயகன் நூற்றாண்டு விழா போட்டிகளை (பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகிய மூன்று போட்டிகள்) அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளாக நடத்துதல். அந்தப் போட்டிகளை வரும் செப்டம்பர் 20 ஆம் தேதிக்குள்ளாக நடத்தி நிறைவு செய்தல். போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் மூன்று பரிசுகள் என எதிர்வரும் 09.10.2022 அன்று காலை திருப்பத்தூரில் நிகழ உள்ள கா.அ.ச.ரகுநாயகன் நூற்றாண்டு விழாவில் வழங்கிச் சிறப்பித்தல்.

Rev. Dr. K.A. Maria Arokiaraj SDB
Additional Principal,
Sacred Heart College (Autonomous)
Tirupattur-635 601, Tirupattur-Dist.

III. 9.10.2022 ஞாயிறு அன்று காலை தொடங்கி பகல் விருந்தோடு நிறைவுறும் கா.அ.ச.ரகுநாயகன் நூற்றாண்டு விழாவில் தூய நெஞ்சக் கல்லூரியின் தமிழ் இளங்கலை, முதுகலை, ஆய்வு மாணவர்கள் அனைவரையும் பங்கேற்றுப் பயன்பெறச் செய்தல் மற்றும் பங்கேற்புச் சான்றிதழ் மாணவர்களுக்கு வழங்குதல்.

5. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி நடைமுறைப்படுத்தப்பெறும் செயல்பாடுகள் யாவும் இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டவையாகவும் முறையான அனுமதிகள் பெற்றும் அமையும்.

6. புரிந்துணர்வு ஒப்பந்தமானது இதில் கையெழுத்திடும் இருவர் தவிர வேறு யாராலும் திருத்தம் செய்ய உகந்ததன்று.

7. புரிந்துணர்வு ஒப்பந்தமானது இதில் கையெடுத்திடும் நாளில் இருந்து ஐந்து ஆண்டுகள் நடைமுறையில் இருக்கக்கூடியது. இதில் கையெழுத்திடும் இருவராலும் இவ்ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் நாட்களில் எப்போது வேண்டுமானாலும் திருத்தம் செய்து கொள்ளப்படலாம். யாரேனும் ஒருவர் இவ்ஒப்பந்தத்தில் இருந்து விலக விரும்பினால் 60 நாட்களுக்கு முன்பே எழுத்து வடிவில் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர் ஒப்பந்தத் தீர்மானங்கள் இருதரப்பினருக்கும் செல்லுபடியாகாது.

8. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிகள் சென்னை நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

9. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி கீழே கையெழுத்திடும் இருதரப்பினரும் தங்களால் நியமிக்கப்பெறும் நபர்களால் மேற்கூறிய பணிகளை நடைமுறைப்படுத்துவார்கள்.

| | |
|---|---|
| Fr. [signature] 30/08/22<br>தூய நெஞ்சக் கல்லூரிக்காக<br>முனைவர் கே.ஏ. மரிய ஆரோக்கியராஜ் அடிகளார்<br>கூடுதல் முதல்வர் (சுயநிதிப் பிரிவு)<br>தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)<br>திருப்பத்தூர்.<br>Rev. Dr. K.A. Maria Arokiaraj SDB<br>Additional Principal,<br>Sacred Heart College (Autonomous)<br>Tirupattur-635 601, Tirupattur-Dist. | [signature] 30/8/22<br>கா.அ.ச. ரகுநாயகன் அறக்கட்டளைக்காக<br>பேராசிரியர் முனைவர் ப. மகாலிங்கம்<br>ஒருங்கிணைப்பாளர் – அறங்காவலர்<br>கா.அ.ச. ரகுநாயகன் அறக்கட்டளை<br>எண் 29, 9வது அவென்யு, அசோக் நகர்,<br>சென்னை - 600083.<br>செல் : 9444028356 |

| சாட்சிகள் | சாட்சிகள் |
|---|---|
| 1. [signature] முனைவர் து. சண்முகம் அடிகளார்<br>துணை முதல்வர் (சுயநிதிப் பிரிவு)<br>தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)<br>திருப்பத்தூர். | 1. [signature]<br>[handwritten details] |
| 2. [signature] முனைவர் பி. பாலசுப்பிரமணியன்<br>துறைத்தலைவர் (சுயநிதிப் பிரிவு)<br>தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை<br>தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)<br>திருப்பத்தூர். | 2. |